Registered as a News Paper in Ceylon P.M.G. No: Hs A. 9/300 of 1953.

இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதி ஸ ஆடி மீ கூ வெள்ளிக்கிழமை (24 July. 1964) [இல-கசு]

ஓ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவியலூர் — உய்யவந்ததேவநாயனார் அருளிச்செய்த

திருவுந்தியார்

மூலமும் — உரையும்

[சைவப்புலவர் திரு. இ. செல்லத்துரை அவர்கள்]

நூல்

அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானைத் தந்ததென் றுந்தீபற. 1.

கொண்டுகூட்டு:

(சிவம்) அகளமாய், யாரும் அறிவு அரிது; அப் பொருள் சகளமாய் வந்தது என்று 'உந்தி' பற (ப்பா யாக); (மேலும் அது ஞானத்தை உனக்குத்) தானைத் தந்தது என்று(ம்) 'உந்தி' பற (ப்பாயாக.)

உரை:—

அகளமாய் யாரும் அறிவு அரிது — சிவம் அருவமாய், எவராலும் அறிதற்கு அரியதாய் உள்ளது;

அப்பொருள் சகளமாய் வந்தது என்று உந்தி பற — அங் ஙனம் உள்ள அப் பரம்பொருள் — நீ பக்குவம் அடைந்தவிடத்து ஆசாரிய மூர்த்தம் ஆகிய உருவத் திருமேனியோடு உனக்குத் தீக்கை செய்தருள வந் தது என்று (கருதிக்) கூறி மகிழ்ந்து (உனது குற்றத் தினின்றும் நீங்கி) 'உந்தி' என்னும் ஆட்டத்தை அயர்வாயாக;

தானைத் தந்தது என்று உந்திபற — மேலும், அது உனது மெய்ஞ் ஞானத்தை (நீ அடைய வேண்டிய காலத்தில்) தானேயே வலிய வந்து உனக்கு உதவி யது என்று ... ... 'உந்தி' என்னும் ஆட்டத்தை அயர்வாயாக. (எ—று.)

விளக்கவுரை:—

* 'உந்தி' என்பது தலைவி தலைவனை அடைந்து அவன்பால் அநுபவித்த ஆனந்த மேலீட்டால் அவ னது அன்பு ஆற்றல் அவனுல் ஆம் பயன் முதலிய வற்றைப் பாடிக் கைகளை இருபக்கமும் வீட்டி(ப் பறவை பறப்பதுபோல) மேலுங் கீழும அசைத்து ஆடும் ஆட்டத்தின் பெயர் என்ப. 'பற' என்பது அவ் வாட்டத்தின் செயலைக் குறித்து உரைக்கப்பட்டது. எனவே, 'என்று உந்தி பற' என்பதற்கு 'என்று இங்ஙனம் பாடி மகிழ்ந்து உந்தி என்னும் ஆட்டத்தை அயர்வாயாக' எனப் பொருள் உரைத்துக கொள்க. இவ்வாறு உரைத்த பொருளுக்கு அமைய 'உந்தி' என்னும் ஆட்டத்தின் பெயர், அதனைக் கூறும் இந் நூலுக்கு ஆகு பெயராய்த் 'திரு' என்னும் அடை யடுத்துத் 'திருவுந்தியார்' ஆயிற்று என நூற்பெயர்க் காரணமும் உணர்க.

'உந்தி பற எனற்பாலது, ஓசையின்பம் கருதிய வீட்டல் விகாரமாய் 'உந்தீபற' என்றுயிற்று.

இனி, 'உந்தீபற' என்பதை, உம் + தீ + பற' எனப் பகுத்துக் கொண்டு, 'என்று + உம் + தீ + பற' என்பதற்கு, 'என்று கருதி, உமது குற்றத்தினின்றும் நீங்குவீராக' எனப் பொருள் உரைப்பினும் அமையும். ஈண்டு: தீ என்பது நீங்கு, குற்றம் எனவும், 'பற' என்பது நீங்கு நீங்குவீராக எனவும் பொருள் பயந்து நின்றன. 'பற' என்றதை ஒருமைப் பன்மை மயக்க மாகவும், 'பறக்க' என்னும் வியங்கோளின் கடைக் குறை விகாரமாகவுங் கொள்க.

மேல் வருஞ் செய்யுள்களில் 'உந்தீபற' என்பதற்கு இவ் விருவகை உரையிலும் ஏற்ற பெற்றி உரைத்துக கொள்க.

அகளம் - அருவம்; நிட்களம் என்பதும் அது. சக ளம் - உருவம். தீ - நீங்கு, குற்றம்; பற - நீங்கு, நீங்கு வீராக, நீங்குக.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

நற்சிந்தனை

(தாலாட்டு)

குற்றமெல்லாம் போக்கிக்
குணமாக்கி எனையாண்ட
தற்பரனே என்குருவே
சாமிநீ கண்வளராய்.

புற்று நோயாளருக்கு கதிர்ச் சிகிச்சை நிலையம் வேண்டும்

"இலங்கையின் வடபெரும் பிரிவில் புற்று நோயாளர் தொகை அதிகரித்துக்கொண் டுவருவதை நோக்கி எவ ரும் பீதியடைவர். மகாகம விலுள்ள கதிர்ச்சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைபெற தற்கு இங்குள்ள புற்று நோயாளர் நெடுந் தூரம் பிரயாணஞ் செய்ய வேண் டிய நிர்ப்பந்தத்திலுலும் சிங்களமொழி பேசும் ஆற் றலில்லாமையினாலும் அங்கு செல்ல விரும்புகின்றார்க ளில்லை. யாழ்ப்பாணம் அர சினர் வைத்தியசாலையில் ஒரு புற்றுநோயாளர் சிகிச் சை நிலையத்தை நிறுவுவ தற்கென ஒரு கட்டடம் ஏற்கனவே அமைக்கப்பட் டிருக்கின்றது. குறித்த கட்டடத்தில் அதனை நிறு வுவதைப் பொதுசனங்க ளும் ஆதரித்துத் தங்கள் அபிப்பிராயத்தை வெளி யிட்டிருக்கின்றார்கள். ஆகையினால் எங்கள் சபை ஒரு புற்று நோயாளர் சிகிச்சை நிலையத்தை யாழ் ப்பாணம் அரசினர் வைத் தியசாலையில் அதற்கென நிறுவப்பட்ட கட்டடத்தில் உடனடியாகத் தாபித்து உதவும்வண்ணம் இலங் கைச் சுகாதாரவதிபரைக் கேட்டுக் கொள்ளுகின்றது" என்ற தீர்மானம் அண்மை யில் நிகழ்ந்த யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை உபசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. இத் தீர்மானத் தைப் பிரேரிக்க அநுமதி கோரிய முதலியார் செ முத்துத்தம்பியவர்கள் சமுகமளிக்காத படியால் திரு. க. சதாசிவம் அவர்கள் அதனைப் பிரேரித்தனர். திரு. எம். கதிரவேலு அவர் கள் அதனை அநுமதித்தனர்.

——

இந்துசமயவகுப்பு

—:—

கொழும்பு இந்துவாலிபர் சங்கத்தால நடாத்தப்படும் இந்துசமய வகுப்புகளை பம் பலப்பிட்டியிலுள்ளசரஸ்வதி மண்டபத்தில் இம் மாதம் 12 ம் திகதி சேர் கந்தையா வைத்தியநாதன் தொடக்கி வைத்தார். இவ் வகுப்புகள் ஒவ்வொருஞாயிற்றுக்கிழமை

தொடர்ச்சி 4ம் பக்கம்

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு

(ஈழச்சேரன்)

சென்ற வாரம் "விளாம்பழமும் வனிதையரும்" என்ற தலைப்பில் வெளியான விருந்தை அன்பர்கள் பல சுவைத்திருக் கிறார்கள் எனபதும், அது அவர்களுக்கு விளாம்பழம் போலப் பயன்பட்டிருக்கிற்று என்பதும் அவ் வன்பர்களது பாராட்டுமொழி களின்மூலம் அறியக்கிடக்கின்றன.

x x x

அந்தப் பாராட்டுரைகளும் பெருமையும் எனக்குரியவையல்ல; அவை (விளாம்பழப்) புலவருக்கும், புலவர் பாடலிற் கருவிருந்த வருக்கும் உரியவை; அவை அவர்களைச் சேர்ந்தனவாக. இதுகிடக்க விருந்து என்றதும் ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது:—

ஒருநாள் புலவருடைய ஆச்சிரமத்தில் 'பணிய' அமர்ந்து அவரது புத்தகம் ஒன்றைப் 'புரட் டிக்' கொண்டிருந்தேன். ஒரு கடதாசி நழுவிக் கீழே விழுந்தது. எடுத்துப் பார்த்தேன். இரண்டு ஆசிரிய விருத்தங்கள் அதில் எழுதப்பட்டிருந்தன; படித்தேன்.

புலவரை யாரோ ஒருவர் விருந்துக்கு அழைத்திருந் தார்போலும்; விருந்தி ல பங்குபற்றக் கொடுத்து வைக் காத புலவரின் சங்கட நிலை, பரிதாபம், கேலி என் பன அப்பாடல்களிலே சுடர்விட்டன. பாடல்களை வைத்துக்கொண்டு சிந்தித்தேன். ... .

புலவருக்கு மகன் ஒருவனே. அவன் கரியன்; ஆயினும் அவருக்கு அவன் தவத்தாற் பிறந்த பெரி யன். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு!" அந்தக் குஞ்சுக்கு நல்ல காய்ச்சல்; பாயிற் கிடக்கி றது; பேச்சு மூச்சு இல்லை; பெரிய பரிதாபநிலை. .....

இராமாயணத்தில் ஒரு 'கரிய செம்மல்' வருகிறான்; அவன் தசரதரின் அரிய மகன். இராமன் என்ற பெயரினன். அந்தக் கறுத்தானைப் பிரிந்து வாழ மாட்டாமல், தன் "ஆருயிர் கின்று ஊசலாட"த் தச ரதன் தவித்தான் என்ற செய்தியைப் புலவர் சும்மா வாசித்து அறிந்திருப்பார்; இன்று அநுபவிக்கும்நிலை யிற் கிடந்தார்; விருந்துக்குப் போவதை மறந்தார்.

விருந்துக்கு அழைத்தவர் கோபித்தார்; விஷயம் தெரிந்தும்!

இந்தக் கோபக் காற்று எப்படியோ புலவர் மேலும வந்துபட்டது. புலவரோ பெருங்காளமேகம். காற்றின் 'குளிர்' பொறுக்க மாட்டாமல் மேகம் பாட்டு மழையாய்ப் பொழிந்தது.

அந்த மழையில் இரண்டு துளிகள்தாம் இவை:

கரியனே எனினும் அன்னாள் காத்திடும் தவத்தினாலே
உரியனாய் உதித்து, காய்ச்சல் உறத்துயர் கொண்டுபாயிற்
பேச்சறக் கிடந்த சேயைப் பிரிந்து ஒரு விருந்துக் கேகி
நாச்சுவை கொள்ள வுண்டால் நல்லவன் என்பீர் போலும். 1.

கடையிலே வாங்கி நீட்டும் கருத்திலா விருந்தில் ஆசை
உடையனாய் உங்கு நண்ணி ஒருபிடி யேனும் உண்ணு
மடையனேன் மயங்கிச் செய்த மாபெரும் பிழையால் துன்பம்
அடைந்தனீர் ஆயின், ஐய. அப்பிழை பொறுத்தல் வேண்டும். 2.

பாட்டுக்களைத் திருமபவும் கவனியுங்கள். முதலாம் பாடலில் விருந்துக்கு வராத காரணத்தைச் சொல்லி, "இப்படி என் நிலைமை இருக்க, விருந்திலே பங்கு பறறி, 'நாச்சுவை கொள்ளவுண்டால் நல்லவன் என் பீர்போலும்!" என்று 'குத்தாமல் குத்தி' வருந்த வைக்கும 'கெட்டித்தனம்' போற்றத் தக்கதுதான். ஆனால்,

விருந்து தேவையில்லாத இப்புலவர், அன்போடு விருந்தளிக்க வந்தவரின் 'உணவு வகையில்' குற்றஞ் சொல்ல வேண்டியதில்லை!" அப்படியிருந்தும்;

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

குரோதி ௵ ஆடி ௴
௯ ௨ வெள்ளிக்கிழமை

புற்றுநோயாளர் கதிர்ச்சிகிச்சை நிலையம் வேண்டும்

புற்றுநோய் பயங்கரமானது. அது எவ்விதம் உண்டாகின்றதென்பது சரியாக அறியமுடியாதெனக் கூறுகின்றார்கள். வைத்திய நிபுணர்கள் இந்நோயைப்பற்றிக் கவனமாக ஆராய்ச்சி செய்து வருகின்றார்கள். "உடம்பில் வெவ்வேறு கடமைகள் புரியும் கோடிக்கணக்கான உயிரணுக்கள் உள உதாரணமாகச் சிவப்பு இரத்த அணுக்கள் பிராணவாயுவைக் கொண்டுள்ளன ஈரல் அணுக்கள் உடலுக்கு வேண்டிய சத்தியைச் சேர்த்து வைக்கின்றன; எலும்பு அணுக்கள் உடம்புக்கு ஆதாரமாயுள்ளன. எல்லா உயிரணுக்களும் ஒரு குறித்த முறையில் இடைவிடாது பிரிவதும் பெருகுவதுமாயிருக்கின்றன, ஆனால் சில வேளைகளில் ஏதோ அறியாத காரணத்தினால் ஒரு சில அணுக்கள் மட்டுக்கு விஞ்சிப் பெருகி உடம்பில் ஒரு வளர்ச்சி அல்லது கட்டி ஏற்படுகின்றது இது காலகெதியில் பெருத்து சுகமுள்ள உயிரணுக்களை அழித்து ஈற்றில் நோயாளியையும் கொல்லுகின்றது இதுவே புற்றுநோய் எனப்படும்" இலங்கைப் புற்றுநோய்ச் சங்கக் காரியாலய வெளியீடொன்றில் புற்றுநோய் இவ்வாறாக விபரிக்கப்பட்டிருக்கின்றது புற்றுநோய் தொடங்கும்பொழுது தேகத்தின் ஓர் இடத்தில் அழற்சி உண்டாகி உயிரணுக்களை மட்டின்றி வளரச் செய்து ஒரு கட்டியைத் தோற்றுவிக்கும். வாய், நாக்கு, சொக்குப் போன்ற உறுப்புக்களில முதலில் புண் உண்டாகிப் பின்னர் புற்றுநோயுண்டாகும். தேகத்தின் மற்றைய உறுப்புகளில் கட்டியுண்டாகும். கட்டியின நிறம்மாறும் இவ்விதமான அறிகுறிகளை நோயாளி காணும்பொழுது உடனடியாக அவர் வைத்தியருக்குக் காட்டிச் சிகிச்சை பெறுவதவசியம்.

புற்றுநோயைத் தடுக்கும் சிகிச்சைமுறைகள் மூன்று சத்திர வைத்தியம், ஊடுருவும் கதிர்கள், இரேடியம் என்பன. இலங்கையில இச்சிகிச்சை யளிப்பதற்கு மேல் மாகாணத்திலுள்ள மகரகம என்ற இடத்தில் மாத்திரம் ஒரு நிலையமிருக்கின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள புற்றுநோயாளர் அங்கு வைத்தியத்துக்குச் செல்வது கடினமாகும். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்று, பின்பு இரு பஸ் ஏறி அங்குச் செல்லவேண்டும். அல்லாமலும் யாழ்ப்பாணப் புற்று நோயாளருக்குச் சிங்கள மொழி தெரியாது. நெருங்கிய உறவினர்கள் அவர்களை அங்கு இடையிடையே சந்திக்க முடியாது. இக்காரணங்களினால் அவர்கள் அங்கு சிகிச்சைபெற இயலாதவராய் வருந்தி உயிர்விடுகின்றார்கள். இப்பெருங்குறையை நீக்கவே யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை உபசபை, யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் புற்றுநோயாளர் கதிர்ச் சிகிச்சை நிலையத்துக்கென ஏற்கனவே நிறுவப்பட்ட கட்டடத்தில் ஒரு நிலையத்தைத் தாபித்துதவும் வண்ணம் இலங்கைச் சுகாதாரப் பகுதித் தலைவரைக் கேட்டிருக்கின்றது. பொதுசனங்களும் அத்தீர்மானத்தை ஆதரிக்கின்றார்கள். கனடா அரசாங்கம் புற்றுநோயாளர் சிகிச்சைக்கு இரு கதிரியக்க சிகிச்சை நிலையங்களை நிறுவுதற்கும் அவற்றுக்குரிய தளபாடங்களையும் கருவிகளையும் நிபுணர்களையும் உதவ முன்வந்திருப்பதாகவும் அறிகின்றோம். கல்வி வைத்தியம் போன்றவற்றின் நிருவாகத்தை மத்திய அரசாங்கத்திலிருந்து மாகாணங்களுக்குமாற்றுவதும் அரசாங்கத்தின்கொள்கையாக விருக்கின்றது. இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் ஒரு புற்றுநோயாளர் கதிரியக்க சிகிச்சை நிலையத்தை எங்கள் அரசாங்கம் உடனடியாகத் தாபித்துதவுமென எதிர்பார்க்கின்றோம்.

—0—

திருவுந்தியார் (மூலமும் — உரையும்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத் திருவுந்தியாருக்குத் தலைவன் சிவன் எனவும், தலைவி பக்குவான்மா எனவும், பயன் அந்த மிலின் பத் தழி வில்வீ டெனவுங் கொள்க.

இச் செய்யுளின் கருத்துக் கமைய இதன்வழிநூல் ஆகிய திருக்களிற்றுப்படியார் கூறும் செய்யுளும் பழைய வுரையும் வருமாறு:-

அகளமாய் நின்ற அம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போல்உலகில் தங்கி — நிகளமாம்
ஆணவ மூல மலம்அகல ஆண்டனன்காண்
மாணவக என்னுடனாய் வந்து. (4)

["அரூபியாய் நின்ற சிவனானவன், சரீரம் எடுக்கின்றவர்களைப்போல, இந்தப் பூமியிலே திருவுருக்கொண்டு, என்னுடனே கூடியிருந்து, விலங்குபோலும் மூலமலமானது என்னை விட்டு நீங்கும்படிக்கு அடிமையாகக் கொண்டான்; சீடனே இந்த அதிசயத்தை அறிவாயாக".]

ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே — பாகத்து
அருள்வடிவுந் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு. (5)

["இருபத்தெட்டு ஆகமங்களையும் ஆர் அறிவார்; அறு சமயங்களினுடைய நீதியையும் ஆர் அறிவார்; யோகப் பயிற்சியினையும் சிவனுடைய கூட்டத்தினையும் யார் அறிவார்; சிவஞானத்தினுடைய முறைமையினையும் ஆன்ம போதத்தினுடைய முறைமையினையும் யார் அறிவார்; மல பரிபாகத்திலே அருளாகிற திருமேனியும் தானுமாக வந்து அடிமை கொள்ளாதே போனால், முடிவாகிற பேரின்பத்தை ஒருவராலும் அறியக்கூடாது; கூடுமாயின் சொல்லுவாயாக".]

—தொடரும்.

கீரிமலையைப் புனிதத்தலமாகப் பிரகடனப்படுத்துக

"அனுராதபுரம் பௌத்தர்களுக்குப் புனிதத்தலமாகப்பட்டது, அதனைத் தொடர்ந்து களனியாகதிர்காமம் என்பவற்றைப் புனிதத்தலங்களாக அமைத்தற்கு முயற்சிகள் கையாளப்பட்டு வருகின்றன. இங்ஙனமாக இந்துக்களுக்கு ஒரு புனிதத்தலமில்லாமை பெருங்குறையாகும். கீரிமலை இந்துக்களுக்கு ஒரு புனிதத்தலமாகக வேண்டிய இடமாகும். எனவே அதனை விரைவில் ஒரு புனிதத்தலமாகக வைக்கும்படி நான் அரசாங்கத்தைக் கேட்கின்றேன். இதற்கு வேண்டிய சகல உதவிகளையும் தெல்லிப்பழைக் கிராமச்சபைக்கு அளிக்க நான் தயாராகவிருக்கின்றேன்." தெல்லிப்பழைக் கிராமச் சபைத்தலைவராக திரு. தம்பு அவர்கள் தெரிவு செய்யப்பெற்றமைக்காக அவரை உபசரிக்க, கொல்லங்கலட்டியில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தல் இவ்வாறாக உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. தருமலிங்கம் அவர்கள் கூறினார். இது இந்துக்களின் சமயத்தையும் கலாச்சாரத்தையும் பேணுவதற்குச் சிறந்த வழியாகும் இதனைப்பற்றி யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை அரசாங்கத்துக்கு மனுச் செய்திருக்கின்றது. சபை பிரசுரஞ் செய்திருக்கின்ற இந்துசாதனம் தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகள் மூலமும் பிரசாரஞ் செய்திருக்கின்றது. திரு. தருமலிங்கம் அவர்கள் இவ்விஷயத்தில் வேண்டிய ஊக்கமெடுத்துத் தமது பிரதிஞ்ஞையைப் பூர்த்தி செய்வாராக.

மகோற்சவம்

ஸ்ரீ. முன்னேஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வடிவாம்பிகாஸமேத முன்னநாதஸ்வாமிக்கு 26-7-64 அன்று மகோற்சவமும், 21-8-64-ல் தேர்த்திருவிழாவும், 22-8-64-ல் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுமென அறியப்படுகிறது.

சித்தாந்தச் சொற்பொழிவு

26-7-64 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30மணிக்கு இராமநாதன் [illegible] சித்தாந்தச் சொற்பொழிவு நடைபெறும்.

வேதனை தீர்ப்பாய் தாயே!

*

(அளவையூர்ச் சஞ்சீவி)

இராகம்: ரஞ்சனி தாளம்: ஆதி

பல்லவி

சோதனை செய்யாமல் போதனை செய்துமன
வேதனை தீர்ப்பாயம்மா — தயாபரி, (சோ)

அநுபல்லவி

வேதனைச் சிறைவைத்த வேலவன் தாயே
நாதனைப் பிரியாமல் நடம்புரி வாயே (சோ)

சரணம்

பஞ்சப் புலமா பாதகர் தொல்லை
மிஞ்சிநான் செய்த வினைக்கெண் ணில்லை
அஞ்சிடும் காலன்வந் தனுகிடு மெல்லை
அஞ்சலென் றருள்வாய் ஐஞ்சு சொல்லை. (சோ)

கவி படைக்கும் புலவர் ஆசிரியரானார்

—:—

உண்மை, நேர்மை, தாழ்மை என்னும் சிறந்த மையினால் எழுதி உலகிற்குக் கவிபடைக்கும் புலவன் எமது இந்துசாதனக் காரியாலயத்தில் கடமைபுரிந்து சைவத்திற்கும் — தமிழுக்கும் தொண்டுபுரிந்து இன்று எம்மை விட்டு ஆசிரியப் பணிக்குச் சென்றுள்ளார். குழந்தைகளுக்குக் கல்வி புகட்டி வருங்காலச் சந்ததியை நிர்ணயிக்கும் இந்த ஆசிரியர் தமது கடமைகளைச் சரியாகச்செய்து குழந்தைகள் உள்ளத்தில் நல்லுணர்ச்சியைப் புகட்டும்படியும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்" என திரு. முகாந்திரம் இ, பொ. இராசையா அவர்கள் இந்துசாதனக் காரியாலயத்தில் கடமைபுரிந்து, ஆசிரியப் பணியை மேற்கொண்ட திரு. ச. வே. பஞ்சாட்சரம் அவர்களின் பிரியாவிடையின்போது குறிப்பிட்டார்கள்.

திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களின் தலைமையின்கீழ் மேற்படி வைபவம் நடைபெற்றது. திருவாளர்கள்: மு. மயில்வாகனம், ஐ. சின்னத்துரை, கா. இரகுநாதன், சி. சிவபாதசுந்தரம் ஆகியோர் சேவை நலம்பாராட்டிப் பேசினார்கள்.

———

சைவ சமய விரிவுரைகள்

அல்லைப்பிட்டிக் கொக்குளைச்சி முத்துமாரியம்மன் கோயில் மிகவும் புராதனமானது. இப்பொழுது அது கிலமுற்றிருக்கின்றது அதனைப் புதுக்கியமைத்து நித்திய நைமித்தியங்களை முறையாக நடத்துதற்குரிய ஒழுங்குகளைப்புரிதற்கு 31-7-64 வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் ஷைகோயில் சன்னிதானத்தில் ஒரு பகிரங்கக் கூட்டம் ஊர்காவற்றுறை பா.உ. திரு.V. நவரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

விரிவுரைகள் பின்வருமாறு நிகழுமெனத் தெரிகின்றது. வரவேற்புரை: திரு. தி. தில்லைச்சிவம். ஆலய வழிபாடு: திரு. மு. மயில்வாகனம், சைவத்திருமுறைகள்: வித்துவான், பண்டிதர், திரு. க. கி. நடராஜன் BOL சத்தி வழிபாடு: (ஈழநாடு) பத்திராதிபர் திரு K P ஹரன், கதாப்பிரசங்கம்: "பக்த கௌரி" அளவையூர்ச்சஞ்சீவி திரு. சீ. வினாசித்தம்பி.

யாழ்ப்பாணப் பெற்றார் கல்விமந்திரியின்திட்டத்தை ஆதரிக்கவில்லை

மக்களால் சனநாயக ஆட்சி முறைப்படி தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், யாழ்ப்பாணம் பெற்றாராசிரிய சங்கமும் அரசாங்கம் தமிழ் மொழிக்கு அரசியலுரிமை வழங்கும்வரை தமிழ் மாணவர்களுக்குச் சிங்கள மொழியைப் படிப்பிப்பதை ஆரம்பிக்க வேண்டாமென அரசாங்கத்துக்குத் தங்கள் மறுப்பைத் தெரிவித்தனர். அங்ஙனம் தெரிவித்திருக்கவும் கல்வி மந்திரி சிங்களாசிரியரைத் தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஒவ்வொரு வித்தியாலயத்தைச் சேர்ந்த பெற்றார்களுக்குள் வாக்கெடுத்து அனுப்பத் திட்டமிட்டிருப்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளையும் பெக்றார் சங்கங்களையும் அவமதிக்கும் செயலாகுமென அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாணம் பெற்றார் சங்கக் கூட்டத்தில் பிரபல அப்புக்காத்தும் ஷை சங்கப் பொதுக்காரியதரிசியுமாகிய திரு.எஸ். பொன்னையா அவர்கள் கூறினார்.

தமிழ் மாணவரின் பெற்றோர்கள் மொழிப் பிரச்சினையால் மனமுடைந்துகிடக்கின்றார்கள். இத்தகைய சூழ்நிலையில் தமிழ் மாணவர்களுக்குச் சிங்களம் கற்பிக்கப்படவேண்டும்என நிறைவேற்றப்பெற்ற திட்டம் ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று என்பதைத் தெரிவித்த பின்னரும அரசியலார் பிடிவாதமாய் அதனை அமுல் செய்யவிருப்பது துன்பத்தை விளைவிக்கின்றது. நீர்கொழும்பு சிலாபம் முதலிய இடங்களில் வசித்த தமிழரைச் சிங்களவர்களாக மாற்றியதைப்போல, ஏனைத் தமிழ்ப் பிரதேச மக்களையும் சிங்களவர் ஆக்குதற்கு அரசியலார் கையாளும் ஒருவகை உபாயமே இத்திட்டமாகும்.

அரசியலாரின் இத்திட்டத்தைத் தடை செய்தற்கு மக்கள் விழிப்புடனிருந்து, வித்தியாசாலைகளில் நடாத்தப்படவிருக்கும் வாக்கெடுப்பிற் பங்குபற்றாமல் விடுதலே சிறந்த உபாயமாகுமென ஷை பெற்றார் சங்கக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரம் இறைவன் வாக்கு

ஓதுபவர்கள் சிவமாந்தன்மையடைவர்

வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடாத்தியது. அப்பொழுது நாவலர் பாடசாலை மாணவிகள்பக்திப்பாடல்கள் பாடினார்கள். பின்னர் பண்டித வித்துவான் திரு. இ. திருநாவுக்கரசு அவர்கள் "தேவாரப்பண்கள்" என்னும் தலைப்பில் விரிவுரை செய்யும் பொழுதுகூறியதாவது, தடுத்தாட்கொண்ட நம்பியாரூரரை நோக்கி இறைவன் "நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க, அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு" என்றே வேண்டினார். எனவே இறைவன் இனிய பண்களில் தனது புகழைப் பாடும்படியேபணித்தார். அடியார்களுடன் சேர்ந்து வாழ்வதையே நாயன்மார் நால்வரும் விரும்பினர். இதையே திருத்தொண்டத் தொகை பாடியசுந்தரமூர்த்தி நாயனாரின் வாயிலாக—"அடியார்க்கும் அடியேன்" என்பதை அறிகின்றோம். ஆண்டவன் விரும்புவது தேவாரம் இது தே + வாரம் என்றும் தேவ + ஆரம் என்றும் பிரியும். தேவஆரமாவது, ஆண்டவனுக்கு மாலை (ஆரம்). இது தேவ பாஷை. இது வேதங்களுக்குச் சமன். ஞான நூல்களின் சாரம் ஸ்ரீ பஞ்சாட்சரம் வேதத்தின் உயிர் ஸ்ரீ ருத்திரம். அதுவே ஸ்ரீ பஞ்சாட்சரம். இது மந்திர வடிவமாகவும், சமா கீதமாகவும் (சங்கீதம்) உள்ளது தேவார திருவாசகங்கள் தண்டமிழின் மேலாகிய கிலியில் உள்ளன. இவற்றைப் பண்ணுடன் மனம் ஒன்றிய நிலையில் ஓதினால் உள்ளம் குளிரும். எனவே ஆயுளும் உடலும் குளிரும். மானிடயாக்கை வடிவு சிவலிங்கம் என்பதைப் பட்டினத்தடிகளாரது வாழ்க்கை காண்பிக்கின்றது மணலில் நண்பர்களால் முதலிருமுறை மூடப்பட்ட பொழுதும் அவர் வெளிவந்துவிட்டார். ஆனால் மூன்றும் முறை வெளி வராமலே சிவலிங்க வடிவானார்.

அனுபூதிகளைத் தருவது தேவாரம். சுந்தரமூர்த்திநாயனார் தோழரானநிலையில் தம் தேவைகளை இறைவனிடம் உரிமையுடன் வேண்டிப்பெறலாம். எனவே அவர் கூறுகின்றார். "மண்ணில் நல்லவண்ணம் வாழ வேண்டுமானால், பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்"! பண்ணுடன் பாட மனம் இறைவனுடன் ஒன்றுகின்றது. பின்னர் தெவிட்டிய நிலை. கடைசியில் திருவருள் எங்களை வந்து நுகர்ந்துவிடும்.

தேவார திருவாசகங்கள் சிவ வாக்கியங்கள். நம்பியாரூரர், திருவாதவூரர் போன்றோர் முன்னர் சிவபெருமானுடைய அடியார் கூட்டத்தில் வாழ்ந்தவர்கள். அவர்கள் நாவில் பிறந்தன யாவும் சிவானுபூதிபெற்ற பாடல்களே. அவை தெய்வீகத் தன்மையுடையவை. அவற்றை நாம் பாட எம்மில் அத்தெய்வீகத் தன்மை படியும். எவ்வாறு காந்தத்துடன் சேர்ந்த இரும்பும் அத்தன்மையைப் பெறுகின்றதோ அதேபோலச் சிவனடியவர்களுடன் சேர்பவர்கள் அத்தன்மை பெறுவார்கள். சாம வேதம்தான் பண்கள். அவை 21 வகைப்படும். ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவன் உள்ளான். பண்களுடன் பாடினால் ஊன் கலந்து, உயிர்கலந்து, உவட்டாமல் இனிக்கும், எனவே தேவாரம் படிப்போர் "அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை "என்று கூறித் தேவார திருவாசகங்களைப் பண்ணுடன் பாட வேண்டிய அவசியத்தை விளக்கி அவற்றைக் கர்நாடக சங்கீதத்திலும் பாடக்கூடிய முறையில் சங்கீத வித்வான்கள் வழிவகுக்க வேண்டும் என்றும் கூறினார்.

கூட்டுப் பிரார்த்தனை

வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றத்தினரால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் கூட்டுப்பிரார்த்தனை நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

26-7-64 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 6-30 மணிக்கு பக்திப் பாடல்களும் திருமுறைப் பாராயணமும் வித்துவான். இரா. திருநாவுக்கரசு அவர்களின் சொற்பொழிவும் நடைபெறும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி வடக்கு
1. வல்லிபுரம் சின்னத்தம்பி
2. பெண் செல்லம்மா
—வழக்காளிகள்

இல. 2570

எதிராக
சாவகச்சேரி தெற்கு
நல்லதம்பி கந்தையா
—எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோர்ட்டில் 2570-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1964-ம் ஆண்டு (ஆகஸ்டு) ஆவணி மாதம் 28-ம் திகதி (28-8-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 965-91-ம், இதில் ரூபாய் 650-க்கு 21-12-62 திகதிதொடக்கம் 9-8-63 திகதி வரைக்கும் .00-க்கு 6 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 152-53 சதம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி நாவற்குளிக் கோவிற்பற்று மறுவன்புலோ இறை "ரைவைகல் வயல்" நெற்பரப்பு (23½-ம்). எல்லை கிழக்கு வாய்க்கால், வடக்கு தனக்கிளப்பு பெரிய தம்பிரான் கோவில் ஆதனம். மேற்கு மூத்ததம்பி கதிர்காமரின் ஆதனம், தெற்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்கு மூரிய ஆதனம் இதடங்கலும்.
மு/பதிவு F 218/2

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 16-7-1964
M 118 24-7-64

கந்தபுராண உரை வெளியீடு

—0—

சிவதேயச் செல்வர்களே!

கந்தபுராண உரை வெளியீட்டின் முதற் சஞ்சிகையாக 1500 பிரதிகள் முருகப்பெருமான் திருவருளால் வெளிவந்துள்ளன.

முதற்சஞ்சிகை வெளிவருவதற்கு எத்தனையோ தடைகள் வந்தும் வடிவேற்பெருமானின் புராணமாதலின் அவையெல்லாம் ஞாயிற்றின் முனபனிப் படலம் மறைவதுபோல மறைந்தொழிந்தன. அடுத்த சஞ்சிகை வெளிவருவதற்கு உறுதுணையாளராக நிற்பவர்கள் இந்த 1500 பிரதிகளையும் விலைக்குப் பெறுமனபர்களே என்பது சொல்லாமலேயமையும்.

அன்றியும், முதற் சஞ்சிகையின் செலவு ரூபா 1865/- இதில் கடதாசிக்கு 800 ரூபா முற்பணமாகக் கொடுக்கப்பட்டது, இன்னும் 1065 ரூபா கொடுக்க வேண்டும். அதற்குக் கையிருப்பம் உள்ளது ரூபா 289/30. இன்னும் ரூபா 775/70 வேண்டியிருக்கின்றது. அன்பர்கள் தங்களாலியன்ற பொருள் தந்து இக்கடனைத்தீர்க்க உதவுவார்கள் என்பது எமது முழுநம்பிக்கை.

ஸ்ரீஇராசஇராசேஸ்வரி அம்பாள் கொடியேற்றம்

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராசேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா 31-7-64 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும். 9-8-64 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 10-8-64 தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

அணிந்துரை அரங்கம்

அக்கினி காரிய விதி

மூலமும் உரையும்

இந்த நூலின் உரையாசிரியர் அச்சுவேலி ஆதி சைவ பரம்பரையினராகிய சிவஸ்ரீ கு. வைத்தீஸ்வரக் குருக்கள் ஆவார்.

பார்வையாளர்கள்:

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்.

வியாகரண சிரோமணி, பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் ஆவார்கள்.

கல்வி பொதுவாக அறிவைத் தருவது. அறிவு சிந்தனையில் ஊறி உணர்வாக வரும்பொழுதுதான் திருவருளால் உண்மை புலப்படும். அந்நிலை கைவரப் பெற்றவரே இந்நூலுரையாசிரியர். அன்றியும் தமது தந்தையார் அவர்களை அடியொற்றி ஆகமங்கள் பதத்திகளை ஆராய்ந்த நெறிப்பாடுடையவர். கல்வியின் பெருஞ்சிறப்பாகிய அடக்கம் என்னும் பண்புக்கு உறைவிடமானவர். ஆதலால் உரை மிகத் தெளிவாக அமைந்திருக்கிறது.

எக்காலத்தும் கிரியைகள் செய்பவரும், செய்விப்பவரும் பொருள் உணர்ந்துசெய்தால், செய்வித்தால், பெரும்பயனைப் பெறுவர். கிரியைகளில், பாவனையென்பது சிறந்ததானதாகும், பொருளுணர்ச்சி இல்லாதவரிடத்துப் பாவனை மனதில் அமைவது அரிதாகும். பாவனையின்றிச் செய்யும் கிரியைகளுக்குப் பயன் மிகக் குறைவாகும். இந்நூல் அக்கினிகாரிய விதிகளுடன்தெளிவான முறையில் உரை எழுதப்பெற்றிருப்பதால் கிரியைகள் செய்யும் ஆசாரியர்களுக்கும் செய்விப்பவர்களுக்கும் பெரும்பயன் பெறுதற்குச்சிறந்த வழிகாட்டியாகும். வடமொழிப் பயிற்சி இல்லாதவரும் உரையைப் படித்து உணர்வார்களானால் அக்கினிகாரியத்தன் உயர்வும், அதனிடத்து அன்பும் மனதிற் பதியும். எல்லோரும் விளங்கத்தக்க முறை இக்காலத்துக்கு மிகமிக அவசியமாகும். இந்நூல் உரையுடன் திருக்கேதீச்சரம் குருகுல வெளியீடாக வந்திருப்பது காலத்தினாற்செய்த நன்றி ஞாலத்தின் மாணப்பெரிது என்று பாராட்டுதற்குரியது.

புலவர்,
த. குமாரசுவாமிப்பிள்ளை,
கொக்குவில்.

இவ்வாரம் 26-7-64 — 1-8-64 உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இவ்வாரம் சுப செய்திகளை நீர் எதிர்பார்க்கலாம். நிலங்கள்மூலம் ஆதாயம் கிடைக்கும். புது முயற்சிகள் பலனைத்தரும். தேக சுகம் சிறிது பாதிக்கப்படும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

சச்சரவுகளை உண்டாக்குவதற்கு முந்திக்கொள்வீர். தேக சுகமும் திருப்திகரமாய் இராது. அங்கியர்கள்மூலம் நன்மைகள் அடையலாம் பழைய முதலீடுகளால் ஆதாயம் கிடைக்கும்.

மிதுனராசி மிருகசிரிடம், 3, 4, ருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.

பழைய முதலீடுகளைக் கவனமாக மேற்பார்வை செய்ய வேண்டும் மனத்தில் சாந்தி குறைவாயிருக்கும். செலவு அதிகப்படும் அந்தச் செலவுகளுக்கு வருவாய் கிடைக்கும். ஞாயிற்றுக்கிழமை காலையைக் கவனமாகக் கழிக்க வேண்டும்,

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

பொதுவாக நல்ல வாரம். ஆனால் அனுகூலத்தைப் பெறுவதற்குப் பிரயாசம் தேவை. மனதில் சாந்தி இராது, செலவு அதிகப்படும். தேகசுகமும் பாதிக்கப்படும். ஞாயிற்றுக்கிழமை பிற்பகலையும். திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை காலை வேளைகளையும் கவனமாகக் கழிக்கவும்.

சிங்காசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தேகசுகம் சற்றுப் பாதிக்கப்படும் வீட்டுக்கருமங்களும் திருப்திகரமாய் இரா தொழிலிலும் மாற்றம் ஏற்படக்கூடும். நிலங்களினால் ஆதாயம் உண்டு, செவ்வாய்க்கிழமை பிற்பகலையும், புதன்கிழமையையும், வியாழக்கிழமையையும் கவனமாகக் கழிக்கவும்.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உம்முடைய சொந்த விஷயங்களில் முன்னேற்றம் காணப்படும். பொதுக்கருமங்கள் தொடங்குவதற்கு இவ்வாரத்தின் முற்பகுதி உவப்பாக இருக்கும் இவ்வாரத்தின் பின்னிரு நாட்களையும் கவனமாகக் கழிக்கவும்.

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தந்தையாருடைய தேகசுகம் பாதிக்கப்படும். உம்முடைய எண்ணப்படி காரியங்கள் கடத்துவதில் கஷ்டம். புறங்கூறுபவர் விஷயத்தில் எச்சரிக்கையாய் இருக்கவும். தேகசுகம் சற்றுப் பாதிக்கப்படும்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

உறவினர்களுக்கும் உமக்கும் இடையில் சச்சரவுகள் கிளம்பக்

தொடர்ச்சி 4ம் பக்கம்

யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட கேமப் பணம்

கேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

மத்திய கல்லூரியில் மாணிக்கவாசகர் குருபூசை

13-7-64 திங்கட்கிழமை யாழ் மத்தியகல்லூரியில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை சிறப்பாக நடைபெற்றது. அத்தருணம் சைவப்புலவர் வீ. எஸ். சுந்தரலிங்கம் அவர்கள் மாணிக்கவாசகர் வரலாற்றிலிருந்து சில வாழ்க்கைத் தத்துவங்களை எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் தமது பேச்சினபோது பத்தினிமார்க்கமேம் பாட்டினையும் அங்கிலியில் மணிவாசகர் கொண்ட சன்மார்க்க வழியின் தனிச்சிறப்பினையும்சாத்திர ரீதியாக எடுத்துகாட்டியதோடு கதாபாத்திரங்களில் மணிவாசகர், அரிமர்த்தனபாண்டியன் என்பாரிடத்து விளங்கிய இலட்சிய வாழ்வு, சைவாசாரம், அறம் தன் குற்றத்தினை ஒப்புகொள்ளுதல் என்பவற்றை மனிதன் தன் வாழ்வில் பின்பற்ற வேண்டுமென்னும் கூறினர்.

மனத்தொடுவாய்மைமொழியிற்
றவத்தொடு
தானஞ் செய்வாரிற்றலை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

மாவிட்டபுரம்
வைத்திலிங்கம் சரவணமுத்து
—வழக்காளி

இல. M. B. 3829

எதிராக

பனை, வீமன்காமம்
அப்புக்குட்டி நடராசா
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M. B. 3829ம் இலககவழககில் எனக்குககிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஐந்து துண்டுக் காணி 1964 ஹூ ஆவணி மீ 22ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும் 11 மணிக்கு இரண்டாம் காணியும் பிற்பகல் 4 மணிக்கு மூன்ரும் காணியும் 4-30 மணிக்கு நாலாம் காணியும் 5 மணிககு ஐந்தாம் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 6460ம் இன்னும் ரூபா 4000 த்துக்கும் 16-1-61 தொடக்கம் 8-8-61 வரைக்கும் 9 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைககு இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 276-67½ சதமும். இதில ரூபா 3800 கொடுபட்டிருக்கிறது

காணி விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக தெல்லிப்பளைக் கோயிற்பற்று வீமன்காமம "உடைகலட்டி" பர. கில இலா 7½ எல்லை கிழககு அருணசலம் குருநாதபிள்ளையினுதனம. வடக்கும் தெற்கும் ஒழுங்கை. மேற்கு இலககையர் குருசாமியினுதனம், இதடங்கலும் யாழ்ப்பாணம் காணி பதிவு கந்தோரில் இல H 262/221 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2) ஷை இறை "தததுவட்டை' பர. கில. இலா 2½ எல்லை கிழககு சின்னததம்பி விசுவநாதரினுதனம், வடக்கு கந்தர் முருகேசுவினுரிமையாளரினுதனம். மேற்கு செல்லையா சிவககொளுந்துவினுரிமையாளரினுதனம். தெற்கு ஒழுங்கையும் சின்னத்தம்பி விசுவநாதரினுதனமும் இதடங்கலும். யாழ்ப்பாணமகாணிபதிவு கந்தோரில் இல H 262/221 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(3) ஷை இறை புலோப்பளை பச்சிலப்பள்ளி மூக்காவல் "இயவில் தோட்டம்" பர கில இலா 280. பனைமரங்களும் மற்றும் செய்பயிர்களும் எல்லை கிழக்கும் வடக்கும் சங்கரப்பிள்ளை பொன்னையாவினுதனம். மேற்கு மாசார் தோட்டம தெற்கு ஒழுங்கை. இதடங்கலில் பிரிவிடபபடாத ½ பங்கு. இல B 27/138 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுளளது.

(4) ஷை இறை "வடலித்தோட்டம் பர கில இலா 215 பனைமரங்களும் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு மணல் ரோட்டு வடககு சங்கரப்பிள்ளை பொன்னையாவினுரிமையாளரினுதனம் மேற்கு சொல்லப்பட்ட பொன்னையாவினுரிமையாளரினுதனமும் தளமும் முடிக்குரிய காணியும் தெற்கு சுப்பிரமணியம் சபாபதியினுதனம. இதடங்கலில் பிரிவிடப்பட்ட 1/2 பங்கு, இல B 43/34 இன் கீழ பதிவு செய்யப்பட்டுள்ளது.

(5) ஷை இறை "குஞ்சிமடததடி தெண்டல் முததிவும மடததடி தோட்டமும" பர கில கிலா 159 பனை மரங்களும் மற்றும பயிர்களும். எல்லை கிழக்கு மணல் ரோட்டு. வடக்கு ஏரயபு செல்லையாவினுதனம். மேற்கு கார்ததிகேசஐயர் குமாரசுவாமி ஐயரினுதனம. தெற்கு சங்கரப்பிள்ளை பொன்னையாவினுரிமையாளரினுதனம். இதடங்கலில் பிரிவிடபபடாத 1/2 பங்கு. இல B 36/219 இன் கீழ பதிவு செய்யப்பட்டுளளது.

இக்கொம்ஷன் மிகுதி தீர்வைத தொகையையும் வட்டியையும் அறவிடுவதற்காக வெளியிடப்பட்டிருககிறது.

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதப்பாளரும்
133 பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர். யாழ்ப்பாணம்
18-7-64,
M 112 24-7-64,

கோட்டு விற்பனவு விளமபரம்

சிறுப்பிட்டி ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச்சங்கமூலம் (பதிவு இலககம் J 1234)
1. வல்லிபுரம மாணிககம (சி. ஐ. வி. உ. வி. ச.தலைவர்)
2. பூததத்ம்பி சிவசுப்பிரமணியம்
—வழக்காளிகள்

வழக்கு இல. M.B. 5306.

எதிராக:

சிறுப்பிட்டி, தாமர் கனகரத்தினம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B, 5306-ம்இலக்க வழககில் எனககுககிடைதத கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் இரணடு துண்டுககாணிகள் 1964-ம் ஆணடு புரட்டாதி மாதம 12-ந்திகதி (12-9-64) சனிககிழமை காலை 10-30 மணி தொடககம அந்தக்காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும

தீர்வைத்தொகை:- ரூபா 1626-75 சதமும். 5-1-63தொடக்கம 16-9-63) வரைககும் ரூபா 1325-க்கு 4 வீத வட்டியும், அதன்பின் முழுத்தீர்வைத தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும வரைககும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 191-07½ சதமும் இதில ரூபா 50/- கட்டப்பட்டுள்ளது

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர்க்கோவிற்பற்று, சிறுப்பிட்டி இறை, "கொடடைக்காடு" நெற்பரப்பு 8 குளி 4. எல்லை கிழக்கு கனகரத்தினம் சேனுதிராசாவின் காணி, வடக்கு சங்கரப்பிள்ளை பெண் கதிராசியின் காணி, மேற்கு பததர் கைம்பெண் சிதம்பரததுக்கும் பங்காளருக்குமுரிய காணி. தெற்கு ஓழுங்கை,

2. ஷை சிறுப்பிட்டி இறை "பெரியபுலம்" நெற்பரப்பு 193, எல்லை கிழக்கும வடககும் தாமர் சுப்பிரமணியத்தின் உரிமையாளரின் காணி, மேற்கு பூதத்தம்பி மயில்வாகனததிற்கும் பங்காளருக்குமுரிய காணி, தெற்கு அம்பலவாணர் அருணசலத்துககும் மற்றையோருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

செ. பாண்டித்துரை,
கொமிஷனர், விலைமதிப்பாளர்
Commissioner of Sales. Valuer,
& Licensed Auctioneer.

தபாற்கந்தோரடி,
நவாலி, மானிப்பாய்,
20-7-64.
M 114 24-7-64,

காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

"கடையிலே வாங்கி நீட்டும கருத்திலா விருந்து" என்று இவர் பழித்துரைக்கலாமா?

"இதற்குக் காரணம் என்னவாயிருக்கலாம்?" சிந்தித்தேன்; எட்டவில்லை.

இதோ! புலவர் வருகிருர்; கேட்டு அடுத்த இதழில் எழுதுகிறேன்.

விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 7853-ம் இலக்க வழக்கில் 1964-ம்ஆ ஆனிமீ 22உ யைக் கொண்ட கோட்டுககட்டளைப்படி கீழே விபரிககப்பட்டிருக கும் ஆதனங்கள் பின்னுற்காணும் ஆதனடாப்பின் ஒழுங்கின்படி 1964-ம்ஆ ஆவணிமீ 27உ வியாழககிழமை முற்பகல் 8-30 மணி தொடக்கம் அந்தந்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்:

கரவெட்டி வடக்கு வஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை மறு நாமம் இராசையா —வழக்காளி

எதிராக

கரவெட்டி மேற்கு கதிரன் கைம்பெண் வள்ளி பருததித்துறை டிஸ்திறிககோட்டு 545-ம் இலககதததுவ வழக்கில் காலஞ் சென்ற கணபதி கந்தனின் ஆதனத்துக்குத் தத்துவகாரி என்ற வகையில், —எதிராளி

அறவிடவேண்டிய தொகையின் யிபரம்:

சித்தாரிதத தொகை— ரூபா 4466. 19-8-63 தொடககம் 8-12-63வரைக்கும் ரூபா 2500-ககு 8 வீத வட்டி ரூபா 61-11. 9-12-63 தொடக்கம் 21-6-64 வரைககும் ரூபா 4527-1க்கு 5 வீத வட்டி ரூபா 121-18. கட்டிய ரூபா 4648-29, கோட்டுச் செலவு ரூபா 253-80. மொத்தம் ரூபா 4902-09.

ஆதனடாப்பு:

1. கரவெட்டி வென்றிக குறிச்சியிறை "முனங்கிதேவன குடியிருப்பு' கில. பர. 3. இத ஆட்சிப்படி கில, பர. 10¾. இதில வடககுப்புறமாக கில. பர. 2 கழித்து மிகுதி கில. பர. 8¾. இதில தெற்குப்புறமாக 10 அடி கழிதது மிகுதி கில. பர. 5¾, பனைகளும். எல்லை கிழக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக கோட்டு 22354-ம் இலககப் பிரிவிடை வழககுத தீர்வையோடு அணைதத படத்தில் 4-ம் துண்டாகிய தண்ணீர் வாய்ககாலும் சித்தர் ஆறுமுகத்துககுடைய ஆதனமும. வடககு சிததர் ஆறுமுகத்துககுடைய ஆதனம். மேற்கு கிட்டிணர் பெண் வள்ளிககுடைய ஆதனம், தெற்கு சிலம்பன் பெண் சிவப்பிககும் மறுபேருககுமுடைய ஆதனம், இது முழுவதும் 3-ம் துண்டில் இருகதுப கிணற்றில் தண்ணீர்ப்பங்கும வழிவாய்க்காலைப்பாவிககும் உரித்தும்.

2. கரவெட்டி குறுவிக்குறிச்சியிறை, "கைபாகுதேவன் சீமா" கில. பர 4, ஆட்சிப்படி கில, பர. 7. பனைகள், வடலிகள, தென்னைகள் வீடும். எல்லை கிழககு சின்னத்தம்பியார் பொன்னம்பலத்துககும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடககு கந்தனின் உரிமைக்காரருககும் மறுபேருக்குமுடையஆதனம்,மேற்கு சுப்பர் கைம்பெண் பாறுபதிக்கும் மறுபேருககு முடைய ஆதனம், தெற்கு வீரகத்தி பெண் புதியாததைக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம். இது முழுவதும்.

S. C. Kanagasabai
கொம்மிசனர்
புலோலி கிழக்கு. 16-7-1964.
M. 111 24-7-64

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B, 5301

சிறுப்பிட்டி கூட்டுறவு விளை பொருள் விற்பனவு ஜனசமூகம் பதிவு இல: J 1234 காணப்படும் மேற்படி சிறுப்பிட்டி,
1. V. மாணிக்கமும்
2. பூதத்தம்பி சிவசுப்பிரமணியமும்
—வழக்காளிகள்

எதிராக

சிறுப்பிட்டி
1. கயிலாயபிள்ளை கார்த்திகேசு (காலம் சென்ற)
2. சுப்பிரமணியம் கனககுந்தரமும் —எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிககோட்டில் M.B. 5301 இலக்க வழககில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒருதுண்டுக் காணியை 1964-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 7-ந்திகதி (7-9-64) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:முதல்வட்டி ரூபா 1266/66, இன்னும் ரூபா 1000-க்கு 2-1-63 தொடக்கம் 27-1-64 வரைக்கும் 100-க்கு 4 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 272.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர்க்கோயிற்பற்று சிறுப்பிட்டி இறை "குளம்பை" பர. கில. இலா. ஏழு (7) வீடும், பயிர்வகைகளும். எல்லை கிழக்கு வயித்திலிங்கம் மகள் தங்கம்மாவினுதனம், வடக்கு வெற்றிவேலு முத்துக்குமாருவினுதனம் மேற்கு காகணபதிப்பிள்ளையார்தோவில

இந்துசமய வகுப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் பமபலப்பிட்டியிலுள் கொழுமபு இந்துக்கல்லூரி ஆரமப பாடசாலையில காலை 9 மணியிலிருந்து 11 மணி வரை நடைபெறும. சேர் கந்தையா வைததியநாதன் பேசுகையில் "மணிவாசகப் பெருமானின் குருபூசைத் தினமாகிய இன்று இந்து சமய வகுப்புகளை ஆரம பிக்கும் கொழுமபு இந்துவாலிபர் சங்கததினரை நாம் பாராட்ட வேண்டும். கொழும்பு மாநகரிலேயுள்ள தமிழ் மக்கள் அனைவரும் இம் முயற்சி வெற்றி பெறத் தம்மால் ஆன உதவி செய்யவேண்டும். சமய அறிவு இல்லாத வாழ்வு பயனற்றது" என்று குறிப்பிட்டார்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்,
மாவட்டக கோட்டில்
பொன்னையா மயில்வாகனம்,
களபூமி, காரைநகர்
—வழக்காளி

இல. M B. 3872

1. மொகிதீன் பாவா மீராசாயுப்பும்

இறந்தவர்:

2. பெண் சுல்த்தான் மொகிதீன் நாசசியா
3. மொகிதீன் பாவா மீரான் சாகிப் யூசுவ், வண்ணார்பண்ணை மேற்கு

(மூன்றாவது எதிரி இரண்டாம் எதிரியின் ஆதனங்களின் சட்ட ரீதியான பராபரிப்புககாரன்
—எதிரிகள்

யாழ்ப்பாணம் மாவட்டகோட்டின் M.B. 3872-ம் இலகக வழககில் எனக்குக்கிடைதத கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஆதனம் 1964-ம் ஆ புரட்டாதிமீ 12உ (12-9-1964) சனிககிழமை காலை 9-30 மணி தொடககம அவ்வாதனத்திற்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:-

முதலும் வட்டியும் 2725/-ரூபா இன்னும் 1-2-61 தொடககம் 12-4-62 வரைக்கும் 2500 ரூபாவிற்கு நூற்றுக்குப் பன்னிரண்டு வீத வட்டியும் கூட்டிக் கட்டிய தொகைககு 12-4-62 தொடககம் முழுத்தொகை இறுக்கும் வரைககும் நூற்றிற்கு ஐந்துவீத வட்டியும் ஏற்பட்ட செலவு ரூபா 176/25 சதமும், வெலியாத்துச் செலவு ரூபா 38/65சதமும், இனிமேல் ஏற்படுஞ் செலவு ரூபா 21/20 சதமும்,

ஆதன டாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைககோவிற்பற்று. வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "மடததிற்புலம்" கிலப்பரப்பு ஒன்று, வீடும், பயிர்களும், எல்லை கிழக்கு முகம்மது அலியின் பெண் நாச்சிப்பிள்ளைககுரியவாதனம், வடக்கு முகம்மது லெப்பை மரைக்காயர் முகமமது அப்துல்காதரினுதனம், மேற்கு கௌத்தின் பெண் செய்நப்புவினுதனமும், இஸ்லாமிய இளைஞர் சங்கக் கட்டிடமும், தெற்கு ஒழுங்கை- இது முழுவதும்:

க. பொன்னுத்துரை
கொம்மிஷனர்,
"அகிலகம்" 28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்,
21-7-64.
M 116 24-7-64.

இவ்வாரம் உங்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடும். தொழில் அபிவிருத்தி காணப்படும். புதுககருமங்களினுலும் நன்மை உண்டு.

கனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல் நிலையைக் கவனிக்க வேண்டும், அலுவலகத்தில் தொந்தரவுகள் ஏற்படக்கூடும். விரும்பியவண்ணம் காரியங்கள் கைகூடமாட்டா, வியாச்சியங்களும் ஏற்படக்கூடும்.

மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

பொருள் வருவாய் கிடைக்க இடமுண்டு. பகை நீங்கிப் புகழ் உண்டாகும், சொத்துக்களினுல் ஆதாயம் உண்டு, சகோதரசகோதரிகளினுல் உதவி கிடைக்கும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

சொந்த விஷயங்களில் முன்னேற்றம் காணப்படும். உமது கஷ்டங்களுக்குச் சிநேகிதர்கள உதவியாய் இருப்பார்கள். புதுக் கருமங்களினுல் ஆதாயம் உண்டு, மனதில் அமைதி குறைவாயிருக்கும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.
1, 2, 3ம் பாதம்

புதுக்கருமங்கள் தாமதம் அடையும், பிற்பகுதியில் அனுகூலம் உண்டு, உட்பகைவர்களைப்பற்றி எச்சரிக்கையாய் இருக்கவும், தேக சுகமும் சற்றுப்பாதிக்கப்படும்.

COMMISSION SALE
விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்ற வழக்கு
இல. 7590

வழக்காளி: சின்னத்தம்பியார் கந்தப்பு கரவெட்டி கிழக்கு.

எதிராக

சுப்பிரமணியம் சட்டநாதர் கரம்பை குறிச்சி வறணி.

மேற்குறித்த இலகக வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப் படியும், இதன் கீழ் காணும் ஆதனம் 1964-ம் ஆ ஆவணிமீ 27உ வியாழககிழமை பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாக இருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன இடாப்பு;

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி வறணி கோயிற்பற்று வறணி '..யற்றுலை'' 'வெல்லைப்புத்து வயலும்'' "காயா வயலும்" சேர்ந்து நெற். பர. 50 5/8. இதில் வடமேற்கு மூலையில் குளி 2நீககி மிகுதி நெ,பர. 50 குளி 5½, எல்லை கிழக்கு சிதம்பரநாதர் வேலாயுதருக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், வடக்கு மணல் தெரு, மேற்கு கந்தப்பு செல்லையாவுக்கும் மறுபேருககும் உடைய ஆதனம், தெற்கு தாமோதரம்பிள்ளை இராமலிங்கத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதிலும் சொரியலாய் 3/5 பங்கு.

	ரூ. ச.
தீர்வைத்தொகை	3026-66
வட்டி 2000-க்கு 14-11-62—23-5-63 வரை 8 வீதம்	180-00
வட்டி 3106/66-க்கு 24-5-63—9-7-64 வரை 5 வீதம்	168-28
	3274-94

கா. முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales&Valuer.
சந்நிதிவேல்,
பருத்தித்துறை. 18-7-64.
M 115 24-7-64

ஆதனம், தெற்கு சங்கரப்பிள்ளை கைம்பெண் சரஸ்வதியினுதனம். கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் நீரோடையும் வழியும். இதடங்கலும்.

தா. செல்லையா,
கொமிசனரும்.விலைமதிப்பாளரும்
இல: 37. கொழும்புத்துறைவீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்
ம. 113 24-7-64.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில். யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2.. இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 24-7-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org